Pamphlet

# அத்தாரின் கடிதம்

(Tamil)



اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الْمُرْسَلِیْنَ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ؕ

# அத்தாரின் கடிதம்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

ஸGகே மதீனா (அமீரே அஹ்லுஸ் ஸுன்னத் அவர்கள் மதீனா ஷரீஃபின் முஹப்பத்தில் மூழ்கி தம்மை தாழ்த்தும் விதமாக தமக்குத்தாமே ஸGகே மதீனா (அதாவது மதீனாவின் நாய்) என்று கூறிக்கொள்வார்கள்) முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரZஸவி عُفِیَ عَنْهُ அவர்களின் புறத்திலிருந்து, அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகள், மத்ரஸதுல் மதீனா மற்றும் ஜாமிஅதுல் மதீனாவின் உஸ்தாத்மார்கள், மாணவ, மாணவிகள் இன்னும் முஅல்லிமாக்களுக்கு, சங்கையான கஃபாவின் பக்கமாக சுற்றி, Gகும்பதே ஹZஸ்ராவை (பச்சை குBப்பாவை) முத்தமிட்டவனாக, ரஜப், ஷஃபான் இன்னும் ரமழான் மாத நோன்பாளிகளின் பரகத்தால் நிரம்பிய மகிழ்ச்சியான ஸலாம்,

اَلسَّلَامُ عَلَیْكُمْ وَ رَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ عَلٰی كُلِّ حَالٍ



www.dawateislami.net

*Ho na ho aaj kuch mayra zikr Huzoor mayn huwa*
*Warna mayri taraf khushi daykh ker muskurayi kiyun*

*(Hadaeq-e-Bakhshish shareef)*

اَلۡحَمۡدُ لِلّٰه عَزَّوَجَلَّ! மீண்டும் ஒருமுறை சந்தோஷமான நாட்கள் வருகிறது. ரஜப் மாதத்தின் வருகை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த சங்கையான மாதத்தில் இபாதத்துடைய விதை நட்டப்பட்டு, ஷஃபான் மாதத்தில் வெட்கத்தின் கண்ணீரால் நீர் பாய்ச்சப்பட்டு, முபாரக்கான ரமழானில் ரஹ்மத் எனும் விளைச்சல் வெட்டப்படுகிறது.

## மூன்று மாத நோன்புகள்

ரஜப் மாதத்தை சங்கைப்படுத்துபவர்களே! கற்றல், கற்றுக் கொடுத்தல், ஹலாலான வியாபாரங்களில் இடைஞ்சல் ஏற்படாவிட்டால், தாய் தந்தையும் காரணமின்றி தடுக்கா விட்டால், யாருடைய உரிமை மீறலும் ஏற்படாவிட்டால், அவசர அவசரமாக, தொடர்ந்து மூன்று மாதங்கள் அல்லது முபாரக்காள ரமழான் மாதத்தின் பர்ளான அனைத்து நோன்புகளையும் நோற்பதோடு, யாரால் எவ்வளவு முடியுமோ அந்தளவு நஃபிலான நோன்புகளை நோற்பதற்கு தயாராகுங்கள். ஸஹர் மற்றும் இஃப்தாருடைய நேரங்களில் கொஞ்சமாக சாப்பிட்டு வயிற்றுக்கு குஃப்லே மதீனா (மதீனத்துப் பூட்டை) போட்டுக்கொள்ளுங்கள். அனைத்து



www.dawateislami.net

வீடுகளிலும் இன்னும் நமது அனைத்து மத்ரஸாக்கள், ஜாமிஆக்களிலும் நோன்பின் வசந்தங்கள் வரவேண்டுமே! ஆகையால் ரஜப் மாதத்தின் முதல் நாளிலிருந்தே நோன்பை ஆரம்பித்து விடுங்கள்.

## ரஜபுடைய ஆரம்ப மூன்று நோன்புகளின் மகிமை

ரஜபுடைய ஆரம்ப மூன்று நோன்புகளின் மகிமையை என்ன வென்று கூறுவது! ஈருலக அருளாளர், பாவிகளுக்கு பரிந்துரை செய்பவர், நபி பெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறியதாக ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் பின் அப்பாஸ் رَضِیَ اللّٰهُ تَعَالٰی عَنْهُمَا அவர்கள் அறிவிக்கிறார்கள். “ரஜப் மாதத்தின் முதலாவது நாளின் நோன்பு மூன்று வருடங்களுக்குப் பரிகாரமாகும், இரண்டாவது நாளின் நோன்பு இரண்டு வருடங்களுக்கும், மூன்றாவது நாளின் நோன்பு ஒரு வருடத்திற்கும் பரிகாரமாகும். பின்பு ஒவ்வொரு தினங்களின் நோன்பும் ஒரு மாதத்திற்குப் பரிகாரமாகும்.”

(அல்ஜாமிஉஸ் ஸஙீர் லிஸ் ஸுயூத்தி, பக்கம் 311, ஹதீஸ் 5051 – ஃபழாயிலு ஷஹ்ரி ரஜப் லில் கல்லால், பக்கம் 64)

நான் பாவி பாவங்களின்றி என்னதான் கொண்டு வருவேன்
நன்மைகள் நாயகமே நல்லடியார்களிடமே இருக்கிறது

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد



www.dawateislami.net

நஃபிலான நோன்பின் வசந்தங்களும் நிறைய உள்ளன. அது தொடர்பாக இரண்டு ஹதீஸ்களை பாருங்கள்.

## 1. மலக்குகள் பிழை பொறுக்க துஆ செய்வார்கள்

ஹழ்ரத் ஸய்யிததுனா உம்மு உமாரா رَضِیَ اللہُ تَعَالٰی عَنْہَا அவர்கள் கூறுகிறார்கள். ஒரு முறை ரஸூலுல்லாஹ் صَلَّی اللہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்கள் என் வீட்டுக்கு வருகை தந்தார்கள், நான் அன்னவர்களின் صَلَّی اللہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم முன்னிலையிலே உணவு வைத்தபோது “நீயும் சாப்பிடு” எனக்கூறினார்கள். நான் நோன்பாளியாக இருக்கிறேன் என பதில் சொன்னதும், அன்னவர்கள் صَلَّی اللہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم கூறினார்கள், எதுவரை நோன்பாளியின் முன் உணவு உண்ணப்படுமோ அதுவரை மலக்குகள் அவருக்காக (நோன்பாளிக்காக) பிழை பொறுப்பின் துஆ செய்துக்கொண்டே இருப்பார்கள். (ஸுனன் திர்மிதி, பாகம் 2, பக்கம் 205, ஹதீஸ் 785)

## 2. நோன்பாளியின் எழும்புகள் எப்போது தஸ்பீஹ் செய்யும்

ஹழ்ரத் ஸய்யிதுனா பிலால் رَضِیَ اللہُ تَعَالٰی عَنْہُ அவர்கள் நபியே அக்ரம், நூரே முஜஸ்ஸம் صَلَّی اللہُ تَعَالٰی عَلَیْہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்களின் திருச்சமூகத்திற்கு வருகை தந்தபோது, ரஸூலுல்லாஹ்



www.dawateislami.net

صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பிலாலே! சாப்பிடுங்களேன், என கூறியபோது, யா ரஸூலல்லாஹ் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم நான் நோன்பாளியாக இருக்கிறேன் என பதிலளித்தார்கள், அப்போது ரஸூலுல்லாஹ் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள், “நாம் நமது உணவை உண்ணுகிறோம், பிலாலுடைய ரிஸ்க் சுவனத்தில் அதிகரிக்கிறது.” பிலாலே! உங்களுக்கு தெரியுமா எதுவரை நோன்பாளிக்கு முன்னால் ஏதாவது சாப்பிடப்படுகிறதோ, அதுவரை அவரது எழும்புகள் தஸ்பீஹ் செய்கின்றன, அவருக்கு மலக்குகள் துஆ செய்கிறார்கள்.

(ஷுஅபுல் ஈமான், பாகம் 3, பக்கம் 297, ஹதீஸ் 3586)

பிரசித்திபெற்ற விரிவுரையாளர், ஹகீமுல் உம்மத், ஹழ்ரத் முஃப்தி அஹ்மத் யார்கான் عَلَيْهِ رَحْمَةُ اللّٰهِ الْحَنَّان அவர்கள் கூறுகிறார்கள், சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது யாராவது வந்தால் அவரையும் சாப்பிட அழைப்பது ஸுன்னத்தான காரியம் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. ஆனால் பொய் உபசரிப்பின்றி உள்ளத்தால் அழைக்க வேண்டும். மேலும் வருபவர்களும் எனக்கு பசி இல்லை என பொய் சொல்லக்கூடாது. ஏனெனில் பொய்யும், பசியும் ஒன்று சேரக்கூடாது. மாறாக (சாப்பிடாவிட்டால், அல்லது) உணவு குறைவாக இருப்பதைக் கண்டால் بَارَكَ اللّٰه (அதாவது அல்லாஹ் عَزَّوَجَلَّ பரகத் அளிப்பானாக) என்று கூற வேண்டும். மேலும் இதுவும் தெரிய வருகிறது, அதாவது ஈருலக அருளாளர்,



www.dawateislami.net

நபிபெருமானார் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களிடம் தனது இபாதத்துக்களை மறைக்காமல் வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் கண்மணி ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அதற்கு சாட்சியாளர்களாக ஆகி விடுவார்கள். இந்த வெளிப்பாடு **முகஸ்துதி** அல்ல. (ஹழ்ரத் ஸய்யிதுனா பிலால் அவர்களின் நோன்பைப்பற்றி கேள்விப்பட்டவுடன் என்ன கூறினார்களோ அதன் விளக்கம் இதுவாகும்) அதாவது இன்றைய உணவை நாங்கள் இங்கு சாப்பிடுகிறோம், ஆனால் ஹழ்ரத் பிலால் رَضِیَ اللهُ تَعَالٰی عَنْهُ அதற்குப் பகரமாக சுவனத்தில் சாப்பிடுவார்கள். அந்தப் பகரம் (பதில்) இதை விட சிறந்ததாகவும், அதிகமான தாகவும் இருக்கும். ஹதீஸ் தனது வெளிப்படையான அர்த்தத்திலேயே உள்ளது. உண்மையிலே அந்த நேரத்தில் நோன்பாளியின் அனைத்து எழும்புகள், மூட்டுகள் இன்னும் நரம்புகளும் தஸ்பீஹ் (அதாவது அல்லாஹ் عَزَّوَجَلَّ வை தூய்மை) செய்துக்கொண்டிருக்கும், அது நோன்பாளிக்கு தெரியாவிட்டாலும் ரஸூலுல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் அதை நன்கு செவிமடுக்கிறார்கள்.

(மிர்ஆத், பாகம் 3, பக்கம் 202)

ஆரம்பத்தில் வாசித்திருந்தாலும், திரும்பவும் (1) “கஃபன் மீண்டது ரஜப் மாதத்தின் வசந்தங்களுடன்” இன்னும் (2) “அண்ணலாரின் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم மாதம்” எனும் இந்த இரண்டு சிறுநூல்களையும் வாசித்துக்கொள்ளுங்கள்.



www.dawateislami.net

அதேபோல் ஒவ்வொரு வருடமும் ஷஃபானுடைய மாதத்தில் ஃபைZஸானே ஸுன்னத் முதலாம் பாகத்தின் ஒரு பகுதியாகிய "ஃபைZஸானே ரமழான்" எனும் நூலையும் கட்டாயம் வாசித்துக்கொள்ளுங்கள். முடியுமானால், ஈத் மிஃராஜுன் நபி صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم உடைய தொடர்பில் 127 அல்லது 27 அல்லது முடியுமான அளவு ஃபைZஸானே ரமழானை பங்கீடு செய்து, அதிகமான நன்மைகளை பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் பொதுவாக அனைத்து இஸ்லாமிய சகோதரர்களிடமும், விஷேசமாக ஜாமிஅதுல் மதீனா இன்னும் மத்ரஸதுல் மதீனாக்களைச் சார்ந்த அனைத்து காரிமார்கள், உஸ்தாத்மார்கள், பொறுப்புதாரிகள் இன்னும் மாணவர்களிடமும் கவலையுடன் கேட்டுக் கொள்வது, தயவுசெய்து (எனது ஹயாத்திலும் வபாத்துக்குப் பிறகும்) ஸகாத், ஃபித்ரா, குர்பானின் தோள்கள், ஏனைய நன்கொடைகளை ஒன்று சேர்ப்பதில் மும்முரமாக செயல் படுங்கள். (இஸ்லாமிய சகோதரிகள் ஏனைய இஸ்லாமிய சகோதரிகளுக்கும், மஹ்ரமானவர்களுக்கும் நன்கொடைகளை வழங்குமாறு உற்சாகமூட்டுங்கள்) அல்லாஹ்வின் மீது ஆணையாக! முபாரக்கான ரமழான் மாதத்தில் தன் கிராமங்களுக்கு, ஊர்களுக்கு செல்லும் ஆசையை தியாகம் செய்து ஜாமிஆக்களில் தங்கி, தனது மஜ்லிஸுடைய உபதேசத்துக்கு அடிபணிந்து ஷந்தா (நன்கொடை) வசூலிக்கும் இடங்களின் பொறுப்புக்களை பாரமெடுக்கும் உஸ்தாத்மார்களையும், மாணவர்களையும் பற்றி கேள்விப் படும்போது எனக்கு மிகவும் சந்தோஷம் ஏற்படுகிறது. எந்த



www.dawateislami.net

உஸ்தாத்மார்கள் மற்றும் மாணவர்கள் எந்தவொரு இடைஞ்ச லும் இல்லாமல், பொடுபோக்குத்தனமாக, ஆர்வமின்மையை வெளிப்படுத்துகின்றார்களோ அவர்களால் எனது உள்ளம் அழுகிறது.

**விஷேசமான மதனி முத்துக்கள்:** ஷந்தா (நன்கொடை) வசூலிப்பதற்காக முன்வரும் அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளும் ஷந்தாவுடைய அத்தியாவசியமான சட்ட திட்டங்களை அறிந்திருப்பது பர்ழாகும். அனைவருக்கும் ஒரு முக்கியமான வேண்டுகோள், அதாவது ஆரம்பத்தில் நீங்கள் படித்திருந்தாலும், தஃவதே இஸ்லாமியின் பதிப்பகமான மக்தபேதுல் மதீனாவினால் அச்சிடப்பட்ட 107 பக்கங்கள் அடங்கிய “ஷந்தே கே Bபாரே மே ஸுவால் ஜவாப்” எனும் நூலை மீண்டும் படித்துக்கொள்ளுங்கள்.

யாஅல்லாஹ் عَزَّوَجَلَّ ரமழான் மாதத்தில் ஷந்தாவும், ஹஜ்ஜுப் பெருநாளில் தோள்களை சேர்ப்பதற்கு முயற்சி செய்து எனது உள்ளத்தை சந்தோஷப்படுத்தக்கூடிய ரஸூல் صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் நேசர்களுடன் நீயும் நிரந்தரமாக சந்தோஷப்படுவாயாக, அவர்களின் பொருட்டால் பாவிகளின் தலைவனான என்னையும் நிரந்தரமாக பொருந்திக் கொள்வயாக. யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! எந்த இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் (தடையில்லா பட்சத்தில்) ஒவ்வொரு வருடமும் மூன்று மாதங்கள் நோன்பு நோற்று, ஒவ்வொரு வருடமும் ஜமாதுல் ஆகிரில் “கஃபன் மீண்டது” எனும்



www.dawateislami.net

சிறுநூலையும், ரஜப் மாதத்தில் “அண்ணலாரின் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم மாதம்” எனும் சிறுநூலையும் இன்னும் ஷஃபானில் ஃபைZஸானே ரமழான் எனும் நூலையும் (முழுமையாக) வாசித்து அல்லது வாசிக்கக்கேட்கும் பாக்கியத்தை பெற்றுக்கொள்கிறார்களோ அவர்களுக்கும், எனக்கும் இம்மை மறுமையின் பாக்கியங்களை தந்தருள்வாயாக, மேலும் எங்களை கேள்வி கணக்கின்றி மன்னித்து, ஜன்னதுல் ஃபிர்தௌஸில் உனது அன்பர் எங்கள் நாயகம் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் அயல்வீட்டாளர் களாக இருக்கும் பாக்கியத்தை தந்தருள்வாயாக.

اٰمِيْن بِجَاهِ النَّبِيِّ الْاَمِيْن صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم

صَلُّوْا عَلَى الْحَبِيْب　　صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## மிஃராஜுன் நபி ﷺ

தஃவதே இஸ்லாமியின் தலைமையில் ரஜப் மாதம் 27ம் இரவு மிஃராஜுன் நபி صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم தொடர்பாக நடாத்தப்படும் திக்ர், கஸீதாவின் இஜ்திமாவில் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களும், ஆரம்பம் முதல் கடைசி வரை கலந்துக்கொள்ளுங்கள். அதேபோல் 27ம் நாளின் நோன்பை நோற்று 60 மாத நோன்பின் நன்மையையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ரஜபுடைய வசந்தங்களின் பொருட்டால் ஆக்கிவிடு
நம்மை நாயக அன்பர்களாக இறைவனே



www.dawateislami.net

## கண்களை பாதுகாத்துக் கொள்ள மதனி முத்துக்கள்

ஐவேளை தொழுகைக்குப்பின் வலது கையை நெற்றியில் வைத்து ‘يَا نُوْرُ’ என்று 11 தடவைகள் ஒரே மூச்சில் கூறி, இரண்டு கைகளின் அனைத்து விரல்களிலும் ஊதி கண்களில் தடவிக்கொள்ளுங்கள், اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ பார்வை இல்லாமை, மங்கலான பார்வை மேலும் கண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் பாதுகாப்பு கிடைக்கும். அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய ரஹ்மத்தைக்கொண்டு குருட்டுத் தன்மையும் தூரமாகலாம்.

**மதனி வேண்டுகோள்:** இந்த கடிதத்தை ஒவ்வொரு வருடமும் ஜமாஅதுல் ஆகிர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமை ஸுன்னத்துக்கள் நிறைந்த வாராந்த இஜ்திமாவிலும், ஜாமிஅதுல் மதீனா மற்றும் மத்ரஸதுல் மதீனாக்களிலும் வாசித்துக் காட்டுங்கள். (இஸ்லாமிய சகோதரிகள் தேவைக் கேற்றவாறு மாற்றிக்கொள்ளுங்கள்.)

وَالسَّلَامُ مَعَ الْاِكْرَامِ

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

❋❋❋



www.dawateislami.net